Tamil Nadu Election Watch

# தமிழ்நாடு வாக்காளர் கருத்து கணிப்பு -2018

*(அரசின் செயல்பாடு மற்றும் வாக்காளர்கள் முக்கிய பிரச்சனை பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு)*

ADR அறிக்கை

**Association for Democratic Reforms**
T-95, C.L. House, 2nd Floor,
Gulmohar Commercial Complex Gautam Nagar,
New Delhi-110049
Phone: +91-011-41654200
Fax: +91-11-46094248

# அறிமுகம் மற்றும் ஆராய்ச்சி-முறை

ஜனநாயக சீரமைப்பு சங்கம்(ADR ) மற்றும் Asterisc Computing & Data Solutions Pvt. Ltd. (RAAC) இதுவரை எந்த ஒரு தேசத்திலுமே இல்லாத அளவு, ஒரு மாபெரும் வாக்காளர் கருத்து கேட்பு செய்துள்ளது. இது பல்வேறு தரப்பு மக்களை உள்ளடக்கி, 534 தொகுதிகளிலும் வாழும் மொத்தம் 2,73,487 வாக்காளர்கள் பங்கேற்ற ஒரு தேசம் தழுவிய கருத்து கேட்பு. இந்த கருத்து கேட்புன் மூன்று பிரதான குறிக்கோள்கள் (i) அரசின் எந்த செயலாக்கத்துக்கு மக்கள் என்ன முக்கியத்துவம் கொடுக்கின்றனர் (ii) அந்த விவகாரங்களில் அரசின் செயலாக்கம் குறித்த வாக்காளர் மதிப்பீடுகள் மற்றும் (iii) வாக்களிக்கும் நடத்தைகளை பாதிக்கும் காரணிகள். அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரை இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த அறிக்கை, தமிழ்நாட்டின் வாக்காளர்களால் (பட்டியலிடப்பட்டுள்ள 31 பிரச்சனைகளில்) மதிப்பிடப்பட்ட 10 மிக முக்கியமான ஆட்சி செயல்பாட்டு பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்கிறது. வாக்காளர்கள் பிரச்சனைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம், அந்த பிரச்சனைகளுக்கு அரசின் செயல்பாடு குறித்த வாக்காளரின் மதிப்பீடு மேலும் ஆராயப்படுகிறது. இந்த ஆய்வில், தமிழ்நாட்டின் அனைத்து 39 நாடாளுமன்ற தொகுதிகளில் வாழும் சுமார் 19,500 பேர் கலந்துகொண்டனர்.

வாக்காளரின் பார்வை குறித்த இந்த ஆய்வின் நோக்கம், அரசிடமிருந்து வாக்காளரின் முக்கிய எதிர்பார்ப்புக்கள் மற்றும் அரசின் செயல்பாடுகளை வாக்காளர் எப்படி மதிப்பிடுகின்றனர் என்பது குறித்த புரிதலை மேம்படுத்துதல்.

கூடுதலாக, இன்றைய ஒரு முக்கிய இடைவெளியை பூர்த்தி செய்ய முயல்கிறது, அதாவது, ஆட்சி செயலாக்கம் மீது ஆதார அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் அரசு செயல்பாடுகள் குறித்த நடவடிக்கை. மிக நீண்ட காலமாக நாம் சித்தாந்தங்கள் அல்லது பல வல்லுனர்களின் கருத்துக்களையே முழுமையாக நம்பி இருந்திருக்கிறோம். அது முக்கியம் தான் என்றாலும், வாக்காளர்கள் எதற்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள் என்பதை

பிரதிபலிப்பது அவசியம்.

இந்த முக்கியத்துவம் மற்றும் மதிப்பீடுகள் காலப்போக்கில் மாறுத், எனவே அவ்வப்போது இந்த கருத்து கேட்பை திரும்பத் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

**ஆராய்ச்சி வடிவமைப்பு:** கிராமப்புற-நகர்ப்புற, பாலினம், சாதி, மதம், மற்றும் வருவாய் போன்ற பல்வேறு பிரிவுகளிலிருந்து பிரதிநிதித்துவம் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, 18 வயதிற்கு மேற்பட்ட மக்களின் ஒரு குறுக்குவெட்டு பிரதிநிதி மாதிரிட்டு, தேர்வு செய்யப்பட்டது. மாதிரிகள் மக்களுடைய முழுமையான பிரதிபலிப்பாக இருப்பதற்கும் தேவையான அத்தனை கவனிப்பும் மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுப்பின் துல்லியம் 95%.

**முக்கிய கண்டுபிடிப்புக்கள்**

- நல்ல வேலை வாய்ப்புகள் (40.20%), அதிக/தரமான மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள் (37.47%), குடிநீர் (35.02%) ஆகியவை தமிழ்நாட்டு வாக்காளர்களின் முதல் மூன்று முக்கிய-பிரச்சனைகள் என்று 2018 தமிழ்நாடு ஆய்வு தெரிவிக்கிறது .

- ஐந்து/5 அளவிலான மதிப்பீட்டில், நல்ல வேலைவாய்ப்புக்கள் (2.25), அதிக/தரமான மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள் (2.34) மற்றும் குடிநீர் (2.41) என்ற முதல் மூன்று வாக்காளர்களின் முக்கிய-பிரச்சனைளில் அரசாங்கத்தின் செயல்பாடு சராசரிக்கும் கீழாக வாக்காளர்களால் மதிப்பிடப்பட்டது.

- கிராமப்புற தமிழ்நாட்டில், பெரும்பாலான வாக்காளர்களின் பிரச்சனையாக விவசாயத்திற்கான தண்ணீர் கிடைப்பது(40%), விவசாய கடன் கிடைப்பது (40%), மற்றும் விதை / உரங்கள் மானியம் கிடைப்பது (37%) ஆக இருந்தது.

- ஐந்து/5 அளவிலான மதிப்பீட்டில் விவசாயத்திற்கான நீர் வசதி ( 2.19), வேளாண் கடன்

வசதி (2.14), மற்றும் விதை / உரங்களுக்கான மானியம் (2.35) ஆகியவற்றில் அரசாங்கத்தின் செயலாக்கம் குறித்து கிராமப்புற வாக்காளர்களால் சராசரிக்கும் கீழாக மதிப்பிடப்பட்டது.

- மேலும், கிராமப்புற தமிழ்நாட்டில் விவசாய விளை பொருட்களுக்கு நல்ல விலைகிடைப்பது (2.29) மற்றும் வேலை வாய்ப்புகள் (2.3) ஆகியவற்றிற்கான மதிப்பீட்டிலும் அரசாங்கம் மோசமாக செயல்பட்டுள்ளதாக வாக்காளர்கள் மதிப்புட்டுள்ளனர்.

- வேலைவாய்ப்புக்கள் வாய்ப்புகள் (48%), போக்குவரத்து நெரிசல் (46%), மற்றும் மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள் (43%) ஆகிய பிரச்சனைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்று தமிழ்நாட்டின் நகர்ப்புற வாக்காளர்கள் கூறியுள்ளனர் .

- நகர்ப்புற வாக்காளர்களின் முக்கிய-பிரச்சனைகளில், ஐந்து மதிப்பெண்ணுக்கு வேலை வாய்ப்புக்கள் ( 2.21), போக்குவரத்து நெரிசல் (2.27), மற்றும் மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்கள் (2.15) என அரசாங்கத்தின் செயலாக்கத்திற்கு சராசரிக்கும் கீழாகவே வாக்காளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

- மேலும், ஒலி-மாசுபாடு (2.17) மற்றும் குடிநீர் (2.27) ஆகியவற்றில் அரசாங்கம் மோசமாக செயல்பட்டுள்ளதாக தமிழக நகர்ப்புற வாசிகள் மதிப்பிட்டுள்ளார்கள்

## I. தமிழ்நாட்டில் வாக்காளர்களின் முதல் மூன்று முக்கிய-பிரச்சனைகளில் அரசின் செயலாக்கம் - மொத்தம், கிராமப்புறம் , நகர்ப்புறம்




(வரைபடம் 1: தமிழ்நாடு - முதல் மூன்று வாக்காளர்களின் முக்கிய-பிரச்சனைகளில் அரசின் செயலாக்கம் மதிப்பீடு)




(வரைபடம் 2: தமிழ்நாடு - வாக்காளர் மற்றும் அரசின் செயலாக்கம் நகர்ப்புற மற்றும் நகர்ப்புற பிளவு)

## II. தமிழ்நாட்டில் கிராமப்புற வாக்காளர் முக்கிய -பிரச்சனைகள் மற்றும் அரசின் செயலாக்கம்




Graph 3: Rural Voters' Priorities in Tamil Nadu

(வரைபடம் 3: தமிழ்நாட்டு கிராமப்புற வாக்காளர்களின் முக்கிய-பிரச்சனைகள்)




(வரைபடம் 4: தமிழ்நாட்டு கிராமப்புற வாக்காளர் முக்கிய பிரச்சனைகளில் அரசின் செயலாக்கம்)

## III. தமிழ்நாட்டு நகர்ப்புற வாக்காளர்களின் முக்கிய-பிரச்சனைகள் மற்றும் அரசாங்கத்தின் செயலாக்கம்/செயல்பாடு




(வரைபடம் 5: தமிழ்நாட்டு நகர்ப்புற வாக்காளர்களின் முக்கிய-பிரச்சனைகள்)




(வரைபடம் 6: தமிழ்நாட்டு நகர்ப்புற வாக்காளர் முந்துரிமைகளில் அரசின் செயலாக்கம்)

## வாக்காளர் நடத்தை

வாக்காளர் நடத்தையில் பின்வரும் அம்சங்களை ஆய்வு செய்ய முயற்சிக்கப்பட்டது. (I) வாக்களிப்பு நடத்தையைப் பாதிக்கும் காரணிகள்: (ii) தேர்தல்களில் போட்டியிடும் குற்றவாளி வேட்பாளர் பற்றிய கருத்து, மற்றும் (iii) குற்றவியல் மற்றும் பணத்தின் பங்கு பற்றிய வாக்காளர் விழிப்புணர்வு

வாக்காளர் நடத்தை பாதிக்கும் காரணிகளை கண்டறிய "ஒரு வேட்பாளருக்கு நீங்கள் வாக்களிக்கும் காரணங்கள் என்ன?" மற்றும் "ஒரு தேர்தலில், ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதில், யாருடைய அபிப்பிராயத்திற்க்கு முக்கியத்துவம் தருவீர்கள்?" போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன.

தேர்தலில் போட்டியிடும் குற்றவாளிகளைப் பற்றிய வாக்காளர்களின் பார்வையை புரிந்து கொள்ள, இரண்டு கேள்விகள் முன்வைக்கப்பட்டன - "ஒரு குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் பாராளுமன்றத்தில் அல்லது மாநில சட்டமன்றத்தில் இடம்பெற வேண்டுமா?" மற்றும் "குற்றப்பின்னணி உள்ளவர்களுக்கு மக்கள் ஏன் வாக்களிக்கிறார்கள்?"

குற்றவியல் மற்றும் பணத்தின் பங்கு பற்றிய வாக்காளர் விழிப்புணர்வு குறித்து மதிப்பீடு செய்ய பின்வரும் கேள்விகளுக்கு கேட்கப்பட்டது - "பணம் / பரிசுகள் விநியோகங்கள் சட்டவிரோதமானது என்று உங்களுக்குத் தெரியுமா?", " பணம் / கடந்த தேர்தலில் பரிசுகள் / மதுபானம்? உங்கள் தொகுதியில் விநியோகித்த நிகழ்வுகள் ஏதேனும் அறிவீர்களா? ", மற்றும்" வேட்பாளர்களின் குற்றம் பற்றிய தகவல்களைப் பெற முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? ".

**Salient Observations on Voting Behaviour in Tamil Nadu**

- 2018 தமிழ்நாடு ஆய்வின்படி, அதிகப்படியான மக்கள் ஒரு வேட்பாளர்களுக்கு வாக்களிகையில் வேட்பாளர்களின் கட்சி முக்கியமானான காரணியாகவும் (முக்கியமானது : 48% மற்றும் மிக-முக்கியம்:26%), இதை தொடர்ந்து வேட்பாளர்-தரம்( முக்கியமானது: 54% மற்றும் மிக முக்கியனானது: 17) மற்றும் முதலமைச்சர் யார்(முக்கியமானது: 44% மற்றும் மிக-முக்கியமானது: 27%) என்றும் கூறியுள்ளனர்

- 18% வாக்காளர்கள், பணம், மது, பரிசுகள் போன்றவை வாக்களிப்பதில் முக்கியமான காரணி என்று கூறியுள்னர். இதில் 12% முக்கியம் என்றும் மிக முக்கியமான 6% குறிப்பிட்டுள்ளனர்.

- தேர்தலில் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பது என தீர்மானிப்பதில், தமிழ்நாட்டின் 84% வாக்காளர்கள் அவர்களது சொந்த கருத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், 7% அவர்களது மனைவி/கணவர் மற்றும் 6% குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

- பெரும்பான்மை(72%) மக்களுக்கு பணம் மற்றும் பரிசுகள் விநியோகிப்பது சட்டவிரோதமானது என்று தெரிந்திருக்கிறது.

- வாக்குகளுக்காக பணம் மாற்றும் இதர பொருட்கள் வாக்காளர்களுக்கு கொடுக்கும்/விநியோகிக்கும் நிகழ்வுகள் பற்றி தெரியும் என்று 43% வாக்காளர்கள் தெரிவித்துள்ளார்கள்

- 98% வாக்காளர்கள் குற்றவியல் பின்னணி உள்ளவர்கள் நாடாளுமன்றத்திலோ , மாநில சட்டமன்றத்திலோ இருக்கக்கூடாது என்று கருதுகின்றனர்

- 37% வாக்காளர்கள் மட்டுமே வேட்பாளர்களுன் குற்றம் பற்றிய விபரங்களை பெறலாம் என்று அறிந்திருந்தனர்

- 37% வாக்காளர்கள் குற்றவியல் பின்னணி இருக்கும் வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க காரணம் அவர்கள் மற்றபடி நன்றாக செயல்படுவதால் என்று கருதினர்

- குற்றச்சாட்டுடைய/குற்றவாளி வேட்பாளர்களுடைய குற்ற பின்னணி பற்றி தெரியாததனால் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கிறார்கள் என்று 36% வாக்காளர்கள் கருதினர்.

- 35% வாக்காளர்கள் குற்றசாட்டுடைய/குற்றவாளி வேட்பாளர் பெயர்களில் உள்ள வழக்குகள் அப்படி ஒன்றும் பெரிய குற்றம் இல்லை என்பதால் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்க கூடும் என்று கருதினர்.

- வேட்பாளர் சக்திவாய்ந்தவர்/செல்வாக்குடையவராக இருப்பதும் (35%), தன் சாதி மதம் சார்தவராக இருப்பதனாலோ(35%), அல்லது தேர்தலுக்காக தாராளமாக செலவழித்ததால்(35%) கூட இருக்கலாம் என்று குற்றசாட்டுடைய வேட்பாளருக்கு வாக்களிக்க இதர முக்கிய காரணிகளாக குறிப்பிட்டுள்ளனர்




(வரைபடம்7: வாக்களிக்கும் நடத்தை பாதிக்கும் காரணிகள்)




(வரைபடம்8: தேர்தல் வாக்களிப்பு முடிவுகளில் எவருடைய கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது)




(வரைபடம் 9: தேர்தலில் குற்றவியல் மற்றும் பணம் பற்றிய வாக்காளர் விழிப்புணர்வு)




(வரைபடம் 10: குற்றம் சாப்பட்ட வேட்பாளர்கள் தேர்தலில் பங்கேற்பது பற்றி வாக்காளர்கள் கருத்து)

## ஆய்வில் பங்கேற்ற வாக்காளர்கள் புள்ளி/மக்கள்தொகை விபரங்கள்

- ஆய்வில் பங்கேற்ற வாக்காளர்கள் 47% வாக்காளர்கள் கிராமப்புறதிலுருந்து, 55% நகர்புரத்திலிருந்து
- 60% ஆண்கள் , 40% பெண்கள்
- 77% பொது, 19% SC, 3% OBC and 1% ST.

பங்கேற்றோர் பற்றிய இதர விவரங்கள் பின்வரும் வரைபடங்களில் காணலாம் -




(வரைபடம் 11 : ஆய்வில் பங்கேற்ற வாக்காளர்கள் பற்றிய இதர புள்ளிவிபரங்கள் )

**CONCLUSION முடிவு**

தமிழ்நாடு வாக்காளர் கருத்து கேட்பு ஆய்வரிக்கை சொல்வது என்னவென்றால், தமிழ்நாட்டில் வாக்காளர்களின் அதிமுக்கிய பிரச்சனைகளை அரசு கண்டுகொள்வதில்லை.

அதனாலேயே வாக்காளர்கள் மிக முக்கியமாக கருதக்கூடிய பிரச்சனைகளில் அரசு மோசமான செயல்படுகிறது. வாக்காளர்களின் மிக முக்கிய 10 பிரச்சனைகளிலுமே அரசு மோசமாக செயல்பட்டிருக்கிறது. இந்த ஆய்விலிருந்து அரசுக்கும், சட்டம் இயற்றுபவர்களுக்கும் சில நெருக்கடியான கேள்விகள் எழும்புகின்றன

- உள்கட்டமைப்பு, சமுதாயம் மற்றும் பொருளாதார முன்னேற்றம் போன்ற விஷயங்களில், அரசின் பொது-கொள்கை முடிவுகள் , பொதுவான சமூகநலனோடு எடுக்கப்படுகிறதா இல்லை ஒரு சில சமூக-பிரிவினர்களுக்கு மட்டும் பயனளிக்கும் விதத்தில் எடுக்கப்படுகிறதா?
- வாக்காளர் முக்கியத்துவம் கொடுக்கும் பிரச்சனைக்கு என்றாற்போல் அரசு நிதி திட்டம்/மறு ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறதா?
- அரசியல் கட்சுகள் தங்கள் தேர்தல் அறிக்கையில் கொடுக்கும் வாக்குறுதிகளுக்கு பொறுப்புடைமை கொண்டுவருவது எப்படி??
- வேலைவாய்ப்புக்கள், மருத்துவ வசதிகள், குடிநீர் வசதிகள் இவற்றை சமுதாயத்தின் அடித்தட்டு மக்களுக்கு அளிப்பதற்கு என்ன என்ன கொள்கைமாற்றங்கள் தேவைப்படுகின்றன??

அரசியல்வாதி தேர்தெடுத்தபின் வாக்காள பெருமக்களுக்கு எந்த பங்கும இல்லாத நிலையில், அரசியல் கட்சிகளே தேர்தெடுக்கபட்ட வேட்பாளர் எந்த புரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கிறது.

அரசியலிலும், ஆட்சியிலும்/நிர்வாகத்திலும் மக்களின் விருப்பங்கள் பிரதிபலிக்க வேண்டும் என்பதே அரசியல் பிரதிநிதித்துவம். வாக்காளர் கொடுத்த இந்த மதிப்பெண்களின் பின்னால் இருக்கிறது நாட்டுமக்கள் எதிர்கொள்ளும் அன்றாட நிதர்சனங்கள். இந்த மதிப்பெண்கள் இந்த நிதர்சனங்களை படம்பிடித்து அரசுக் சொல்ல முயற்சிக்கின்றன. மற்றும் , வாக்காளர்கள் அரசை எப்படி பார்க்கிறார்கள் என்பதை அரசாங்கத்துக்கு எடுத்து சொல்ல இந்த மதிப்பீடுகள் முயற்சிக்கின்றன.

**DISCLAIMER**

வாக்காளர்களின் பார்வையில் ஆட்சிமுறையில் முக்கியமான பிரச்சனைகள் எப்படித் தங்களது தினசரி வாழ்க்கையை பாதிக்கின்றன மற்றும் தங்களது அரசாங்கங்கள் இப்பிரச்சனைகளை தீர்ப்பது குறித்து வாக்காளர்கள் எவ்வளவு திருப்தியாக உள்ளனர் என்பதைக் கண்டறியவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வு சிறந்த விஞ்ஞான உத்திகளைக் கொண்டும் அதைத் தொடர்ந்த கண்டுபிடிப்புகளும் அறிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட தகவல் ஆய்வு உத்திகளைக் கொண்டும் நடத்தப்பட்டது. இவ்வறிக்கையில் நிறுவப்பட்ட அனுமானங்கள் இந்திய வாக்காளர்கள் அளித்த பதில்களைச் சார்ந்த்தாகும்.

இந்த ஆய்வு, வாக்காளர்களின் ஆட்சிமுறை கோரிக்கைகளுக்கும் தங்களது அரசாங்கங்களின் செயலாக்காமாக இந்திய வாக்களர்கள் காண்பதற்கும் இடையே உள்ள இடைவெளியை அறிவதற்கான ஒரு முறையான மற்றும் அறிவியல் ரீதியான ஆய்வாகும். இந்த ஆய்வு எந்த ஒரு அரசாங்கங்கத்தையோ, அல்லது அரசியல் கட்சியையோ அல்லது தனிமனிதனையோ அல்லது அமைப்பையோ அல்லது நிறுவனத்தையோ பாராட்டவோ அல்லது மட்டப்படுத்தவோ முயற்சிக்கும் பொருட்டு இல்லை.

இந்த அறிக்கையில் உள்ள அனைத்து விவரங்களும் சரியான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டி அனைத்து முயற்சியும் ADR

மேற்கொண்டுள்ளது.

இந்த அறிக்கையை மேற்கோள் காட்ட விரும்புபவர்கள் தமிழ்நாடு வாக்காளர் கருத்து கேட்பு 2018 என குறிப்பிடவும்.

**To Get Information About Candidates/Parties/MPs/MLAs/ Corporators/PILs in courts**

Give us missed call on: **08010445555**

Toll Free Helpline No: **1800-110-440**

Journalist Helpline no: **8010394248**

Subscribe to ADR on **WhatsApp** for updates: **7840067840**

Visit: **www.myneta.info**

Email: **adr@adrindia.org**

Send SMS: **Myneta <pincode or constituency> to 56070 or 9212356070**

To contact ADR State Partners, visit:
**https://adrindia.org/about-adr/state-coordinators**

## Social Media

/myneta.info /adrindia.org @adrspeaks /adrspeaks /adrspeaks

https://in.linkedin.com/company/association-of-democratic-reforms-adr-

## Our Websites

**www.adrindia.org**
Provides detailed analytical reports of Lok Sabha, State Assemblies, local body elections & financial reports of political parties & ongoing PILs in courts

**www.myneta.info**
Provides full information of criminal cases, asset, liability and education details declared by candidates in the self sworn affidavits

## Android Apps

**Myneta:** The criminal, financial, educational & other background information self declared by candidates in their affidavits during elections is now available on your mobile phones.

**Election Watch Reporter:** This app provides a tool to the citizens to capture violations of election related laws & the code of conduct.
**Both the applications are available on Google Play Store.**